<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 799/2023 |
| Prosecution: | அ.சா.7 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | விக்னேஷ்வரன்( காவல் உதவி ஆய்வாளர்) |
| **Father/Husband' Name** | ~ | குமாரசாமி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day of</u> **<u>Dt. 11.02.2026.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது குரோம்பேட்டை காவல் நிலையத்தில் போக்குவரத்து புலனாய்வு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். இதற்கு முன்பு எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த வழக்கின் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் சீனிவாசன் என்பவரை நன்கு தெரியும். காவல் ஆய்வாளர் பணி ஓய்வு பெற்று சென்று விட்டார். அவரது கையொப்பம் நன்கு பரிச்சயம். அவர் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் வெங்கடேசன் என்பவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் மேற்படி வழக்கை புலன் விசாரணை மேற்கொண்டு

புகார்தாரர் ஜிதேந்திரபிரசாத் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் பின்டு குமார் மற்றும் ராமர் மற்றும் சம்பவத்தை கேள்விபட்ட சாட்சியான கலைவாணன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். பின்னர் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ராஜா மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே அ.சா.ஆ. 6 மற்றும் 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் விபத்தில் இறந்த புகார்தாரரின் தம்பியான நகீனாபிரசாத் என்பவரின் பிரேதத்தின் மீது குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை பதிவு செய்துள்ளார். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பின்னர் இறந்துபோன நகீனாபிரசாத் என்பவரின் பிரேதத்திற்கு பிரேத பரிசோதனை செய்த குரோம்பேட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் சாராபானு என்பவரை விசாரணை செய்து மேற்படி பிரேத பரிசோதனையில் இவ்வழக்கு விபத்தில் இறந்த நபர் தலைக்காயம் மற்றும் அதிர்ச்சியினால் இறந்ததாக கருத்துரை குறிப்பிட்டு வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ. 9 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பி பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை புகார்தாரரிடம் ஒப்படைத்த காவலர் பாபு என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. கடந்த 31.01.2023 ஆம் தேதி மதியம் 3.00 மணிக்கு மேற்படி காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டு காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் விபத்தில் சம்பந்தப்பட்டTN 11 AM 2974 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சோமசுந்தரம் என்பவரை விசாரணை செய்து விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்பட்ட விபத்தில்லை என்று வழங்கிய கருத்துரையை ஆய்வறிக்கையில் பதிவு செய்த மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளரின் வாக்குமூலத்தினை பதிவு செய்து அவர் வழங்கிய **வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு தன்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279,304(A) இ.த.ச.வின் கீழ் 03.02.2023 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவம் நடைபெற்ற தினம் அன்று புகார் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். இவ் வழக்கில் புகார்தாரருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தொடர்பாக கையொப்பம் பெற்று முதல் தகவல் அறிக்கை நகல் வழங்கப்பட்டதா என்றால் இல்லை.முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எவ்வளவு நாட்களுக்குள் நீதிமன்றத்தில் அனுப்ப வேண்டும் என்றால் மூன்று நாட்களுக்குள் கொடுத்து விட வேண்டும். இவ் வழக்கில் முதல் தகவல் அறிக்கை மூன்று மாதம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு விபத்தில் இறந்த நபரின் ஆடையில் விபத்து வாகனத்தின் டயர் மார்க் ஏதேனும் இருந்ததா என்றால் அது பற்றி தெரியாது.விபத்து நடைபெற்ற இடத்தில் பாதசாரிகள் கடப்பதற்காக வழி அல்லது பாதை ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை. பொதுமக்கள் யாரும் சாலையை கடந்து செல்லக்கூடாது என சாலை நடுவே தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ் வழக்கு விபத்தானது இவ்வழக்குபத்தில் இருந்த நபரின் கவன குறைவா தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு விபத்தில் இறந்த நபருக்கு இழப்பீடு பெறுவதற்காக எதிரி மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif-cum Judicial Magistrate,
Pallavaram